திரு.சு.சிவசண்முகராஜா, இ.ஆ.ப.,
இயக்குநர்.

ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்.
சென்னை—5.

நே.மு.க.எண்.அய்1/ 28791/2015 நாள்.1.3.2016

அன்பார்ந்த

பொருள்: ஆதிதிராவிடர் நலம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின்குழந்தைகளுக்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை விண்ணப்பிக்கும் பொழுது சமர்ப்பிக்கப்படவேண்டிய வருமான சான்று வழங்கும் பொழுது கடைபிடிக்கவேண்டிய நெறிமுறைகள் சார்பாக.

பார்வை:
1. நடுவணரசு சமூக நீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் பழங்குடியின நல அமைச்சகத்தின் மூலம் செயற்படுத்தப்பெறும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்ட வரைமுறைகள்
2. அரசாணை (நிலை) எண் 658/ சமூக நலத்துறை நாள் 01.09.2016.
3. மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்ட வரைமுறைகள்
4. அரசாணை (நிலை) எண் 78, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3)துறை, நாள் 3.8.2012.
5. சமூக நீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சகத்தின்கடிதம் எண் 11017/01/2008/SCD-V(VOL.III) நாள் 29.4.2013
6. பழங்குடியினர் நல அமைச்சகத்தின் கடிதம் எண் 20014/5/2002/EDN நாள் 23.5.2013
7. அரசாணை (நிலை) எண் 51, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3)துறை, நாள் 7.8.2013.
8. திரு.K.B.G.திலகர், மாநில பொதுச் செயலர், தமிழ் நாடு அரசு SC/ST அலுவலர் நலச் சங்க முறையீடு நாள் 20.11.2015.

**********

பார்வை இரண்டில் காணும் அரசாணை மற்றும் நடுவணரசு மற்றும் மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்ட வரைமுறைகள், அரசாணைகள், மைய அரசு கடிதங்களின் மீது தங்களது கவனத்தை ஈர்க்க விழைகிறேன்.

2) பார்வை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள, நடுவணரசால் அவ்வப்போது வெளியிடப்படும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்ட வரைமுறைகளின்படி ஆதிதிராவிடருக்கும் பழங்குடியினருக்கும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுவருவதும், பார்வை மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ள மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்ட வரைமுறைகளின்படி, மைய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டங்களின் கீழ் பயன் பெற இயலாத ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் இனத்தை சார்ந்தவருக்கும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுவருவதும் தாங்கள் அறிந்ததே.

3) நடுவணரசு திட்டத்தின் கீழ் பார்வை ஆறில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையின்படி 1.4.2013 முதல் வருமான வரம்பு 2.50 இலட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் திட்டத்தின்கீழ் பார்வை மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைப்படி 2012–13 கல்வியாண்டு முதல் வருமான வரம்பு 2.00 இலட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

4) நடுவணரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்ட வரைமுறைகளின்படி அரசு ஊழியரின் பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகை விண்ணப்பிக்கும்பொழுது அரசு ஊழியரின் ஊதியம் உள்ளிட்ட பல்வேறு வகை மூலங்களின் (Various Sources of Income) மூலம் அவர்தம் குடும்ப ஆண்டு வருமானம் கணக்கிடும் பொழுது அத்தகைய கணக்கீட்டில் அவர் பெறும் வீட்டுவாடகைப்படியை கணக்கில் கொள்ளாது வருமானம் கணக்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

5) அதேபோன்று மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்ட வரைமுறைகளின்படி தமிழக அரசு ஊழியர்களின் பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகை விண்ணப்பிக்கும் பொழுது தமிழக அரசு ஊழியரின் ஊதியம் உள்ளிட்ட பல்வேறு வகை மூலங்களின் (Various Sources of Income) மூலம் அவர்தம் குடும்ப ஆண்டு வருமானம் கணக்கிடும் பொழுது அத்தகைய கணக்கீட்டில் அவர் பெறும் அகவிலைப்படியை நீக்கி வருமானம் கணக்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் வருமான வரம்பு காரணமாக மைய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தில் பயன்பெற இயலாத ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் இனத்தை சார்ந்த தமிழக ஊழியரின் பிள்ளை, வேறு வருமான மூலங்கள் ஏதும் இல்லாத நிலையில், அரசு ஊழியர் பெறும் அகவிலைப்படி நீக்கி வருமானம் கணக்கிடும் பொழுது மாநில அரசு திட்டத்தின் கீழ் பயன்பெற இயலும்.

6) ஆனால் நடைமுறையில் மேற்கண்ட போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்ட வரைமுறைகள் மற்றும் அரசாணைகள் சரிவர செயலாக்கம் செய்யப்படவில்லையென பல்வேறு முறையீடுகள் வரப்பெற்றுள்ளன. பார்வை ஏழில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ் நாடு அரசு ஆதிதிராவிடர்/ பழங்குடியின பணியாளர்கள் நல சங்க முறையீட்டிலும் அரசாணை நிலை எண் 658/சமூக நலத்துறை நாள் 1.09.1981 மற்றும் அதன்பின்னான மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்ட வரைமுறைகளை முழுமையாக நடைமுறைப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

7) ஆகவே பார்வை இரண்டில் குறிப்பிட்டப்பட்டுள்ள அரசாணை நிலை எண் 658/சமூக நலத்துறை நாள் 1.09.1981–ஐ நடைமுறைப்படுத்தி, தமிழக அரசில் பணியாற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த பணியாளர்களின் பிள்ளைகளுக்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை விண்ணப்பிக்கும் பொழுது பெற்றோர் ஆண்டு வருமான சான்றில் அகவிலைப்படி மற்றும் வீட்டு வாடகை படியை நீக்கி வருமான சான்று வழங்கிட தகுந்த மேல் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இத்தகைய நடவடிக்கை தமிழக அரசில் பணியாற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த பணியாளர்களுக்கு எவ்வித சிரமுமின்றி வருமான சான்றும் அவர்களின் பிள்ளைகளுக்கு உரிய கல்வியும் கிடைத்திட உறுதுணையாகும் என்பதனை கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

8) மேலும் இப்பொருண்மையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தினை அனுப்பிடவும் கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு : மேலே சொல்லப்பட்டவாறு

தங்கள் அன்புள்ள,

(சு.சிவசண்முகராஜா) 33/34

பெறுநர்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்டம்.

நகல்

1) வருவாய் நிர்வாக ஆணையர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 5.
2) திரு.K.B.G. திலகர், மாநில பொதுச் செயலாளர், தமிழ் நாடு அரசு SC/ST அலுவலர் நலச் சங்கம், அரசு அருங்காட்சியக வளாகம், பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை–8.